திசையன்விளைப் பேரூராட்சியில் குடிநீர் வழங்குதிட்டம்

*வினா எண். 150:—திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள திசையன்விளை பேரூராட்சி மன்றத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) 1980-81—ம் நிதியாண்டில் அதனை நிறைவேற்றும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) உள்ளது.

(ஆ) இத்திட்டம் 1981-82 நிதியாண்டு முடிவுக்குள் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[துணை வினா இல்லை]

பெரம்பலூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்

*வினா எண் 151:— திரு. ஜே. எஸ் இராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் தேவை என்ற கோரிக்கை வந்ததா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) பெரம்பலூர், குரும்லூர் பேரூராட்சிகள் மற்றும் மூன்று வழியோரக் கிராமங்கள் ஆகியவற்றுக்கென் ஒரு கூட்டு குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு ஜே எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூருக்குக் குடி நீர் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கோரிக்கை பல ஆண்டுகாலமாக வலியுறுத்தப் பட்டு வருகின்றது என்றாலும் அதற்கான முறையான முன் ஆய்வு செய்யப்பட்டு ஆண்டுகள் பல ஆயிற்று என்றாலும், இத்திட்டம் இன்னும் பரிசீலனையில் தான் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறார்கள். இத்திட்டம் எப்பொழுதுதான் அரசால் அனுமதிக்கப்படும் என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?